புதுச்சேரி அரசு

ஆதிதிராவிடர் நலத்துறை

புதுச்சேரி, தேதி:11-09-2018

எண்.17007/1/AWD/2018-19

<u>அறிவிப்பு</u>

பொருள்: ஆதிதிநது – புதுச்சேரி, வில்லியனூர் தொகுதி, ஒதியம்பட்டு வருவாய் கிராமத்திலுள்ள பெரியபேட் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இலவச மனைப்பட்டா பெறுவதற்கு தகுதி வாய்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய நபர்களிடமிருந்து (OEBC) தேவைக்கான கணக்கெடுப்பு மற்றும் மனை பெறுவதற்கான விண்ணப்பம் - அளித்தல் - சம்மந்தமாக.

பார்வை: எண்.3277/ஆதிதிநது/பொது-3/FHS/2017-18 தேதி.20.10.2017, 17.11.2017 மற்றும் 04.12.2017.

& & &

மேற்கண்ட பார்வை எண்களின் படி புதுச்சேரி, வில்லியனூர் தொகுதி, ஒதியம்பட்டு வருவாய் கிராமம், பெரியபேட் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் இலவச மனைப்பட்டா பெறுவதற்கு தகுதி வாய்ந்த ஆதிதிராவிடர் (SC) மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய நபர்களிடமிருந்து (OEBC) விண்ணப்பங்கள் பெற அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. பொருளாதாரத்தில் பின்தங்கிய நபர்களிடமிருந்து (OEBC) போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், அவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பாக பெரியபேட் கிராமத்தில் இலவச மனைப்பட்டா பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை புதுச்சேரி, தட்டாஞ்சாவடி, ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலகத்தில் 12.09.2018 முதல் அலுவலக நாட்களில் நேரில் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தகுந்த சான்றிதழ்களுடன் 24.09.2018 அன்று மாலை 5.00 மணி வரையில் ஆதிதிராவிடர் நலத்துறை அலுவகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலம் கடந்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் விண்ணப்பங்களை <u>www.py.gov.in</u> என்ற இணைய தள முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இயக்குநர்

ஆதிதிராவிடர் நலத்துறை